**பாடம் - 11**
**ஈமானும் அதன் அடிப்படைகளும்(தொடர்ச்சி)**

**الدرس الحادى عشر**
**تابع الإيمان وأركانه**

## 1.அல்லாஹ்வை நம்புவது

அல்லாஹ்வை நம்புவது என்பது அவனது இறைத்தன்மையிலும், படைத்துப் பரிபாலிப்பதிலும் அவனுடைய பெயர்கள் மற்றும் தன்மைகளிலும் அவன் தனித்தவன் அவனுக்கு இணை துணை யாரும் இல்லை என நம்புவதாகும். அல்லாஹ்வை நம்புவதில் பல விஷயங்கள் உள்ளன.

**1.**அவன்தான் வணக்கத்திற்குத் தகுதியான உண்மையான இறைவன் என நம்புதல். ஏனெனில் அவன்தான் மனிதர்களைப் படைத்தவன், அவர்களுக்கு உபகாரம் செய்பவன், அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குபவன், அவர்களின் இரகசியங்களையும் பரகசியங்களையும் அறிபவன், அவர்களில் கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கு நற்கூலி வழங்கவும், மாறுசெய்பவர்களுக்கு தண்டனை வழங்கவும் சக்தியுள்ளவன்.

இந்த நம்பிக்கையின் எதார்த்த நிலை என்னவெனில் வணக்கவழிபாட்டின் அனைத்து வகைகளையும் அச்சத்துடனும் ஆவலுடனும் பணிவான முறையில் அதே சமயம் அல்லாஹ்வை பரிபூரணமாக நேசிப்பதுடனும் அவனது மகத்துவத்திற்கு முன் முழுமையாகப் பணிவதுடனும் அவனுக்கு மட்டுமே நிறைவேற்றுவதாகும். திருமறைக் குர்ஆனில் பெரும்பாலான வசனங்கள் இம்மகத்தான அடிப்படை அம்சத்தைப்பற்றியே இறங்கியிருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ فَاعْبُدِ اللهَ مُخْلِصًا لَهُ الدِّينَ. أَلَا لِلهِ الدِّينُ الخَالِصُ ﴾ ﴿الزمر:٢-٣﴾

(நபியே!) வணக்கத்தை உளத்தூய்மையுடன் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கி அவனை வணங்குவீராக! தெரிந்து கொள்ளுங்கள்! தூய்மையான இம்மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியதாகும். (39:2-3)

﴿وَقَضَى رَبُّكَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ ﴾ ﴿الاسراء:٢٣﴾

அவனைத் தவிர வேறெவரையும் நீங்கள் வணங்கக் கூடாதென உம் இறைவன் விதித்துள்ளான். (17:23)

﴿ فَادْعُوا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ ﴾ ﴿غافر:١٤﴾

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி தூய எண்ணத்துடன் அவனிடமே பிரார்த்தியுங்கள். நிராகரிப்பாளர்கள் இதனை வெறுத்தாலும் சரியே!. (40:14)

**2.**அல்லாஹ் தன் அடியார்கள் மீது கடமையாக்கிய அனைத்தையும் நம்புவதும் இறைநம்பிக்கையில் அடங்கும். உதாரணமாக இஸ்லாத்தின் ஐந்து அடிப்படைக் கடமைகளான வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்வது, தொழுகையை நிலைநிறுத்துவது, ஜகாத் கொடுப்பது, ரமழானில் நோன்பு நோற்பது, புனிதமிக்க அல்லாஹ்வின் ஆலயத்திற்குச் சென்று வர சக்தி பெற்றவர்கள் ஹஜ் செய்வது ஆகியவற்றை நம்புவதும் இன்னும் தூய்மைமிக்க இம்மார்க்கம் கொண்டு வந்துள்ள ஏனைய கடமைகளை நம்புவதும் இறைநம்பிக்கையில் அடங்கும்.

**3.** அல்லாஹ் தான் அகிலத்தைப் படைத்தவன், மனிதர்களின் காரியங்களை நிர்வகிப்பவன், தனது அறிவு ஞானம் மற்றும் ஆற்றலுக்கேற்ப- தனது விருப்பப்படி அவர்கள் மீது அதிகாரம் செலுத்தி வருபவன் என நம்புவதும் இறை நம்பிக்கையில் அடங்கும். அவனே இவ்வுலகத்திற்கும் மறு உலகிற்கும் அதிபதி, அகில உலகமனைத்தையும் படைத்துப் பாரிபாலிப்பவன், அவனைத் தவிர வேறு படைப்பாளன், அவனைத் தவிர வேறு பாரிபாலிப்பவன் எவருமில்லை. அடியார் களைச் சீர்திருத்தவும் இம்மை, மறுமை வாழ்விற்கு எதில் ஈடேற்றம் இருக்கிறதோ அதன் பால் அவர்களை அழைக்கவும் அவன் தூதர்களை அனுப்பி வைத்தான்ளு வேதங்களையும் இறக்கி வைத்தான். இன்னும் இவையனைத்திலும் அவனுக்கு இணை துணை எவருமில்லை என்று நம்புவதும் இறைநம்பிக்கையில் அடங்கும்.

﴿ اللهُ خَالِقُ كُلِّ شَيْءٍ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ وَكِيلٌ ﴾ ﴿الزمر: ٦٢﴾

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் அனைத்துப் பொருட்களையும் படைத்தவன். அவன் ஒவ்வொரு பொருளுக்கும் பொறுப்பாளன். (39:62)

**4.** திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் வந்துள்ள இறைவனின் அழகிய பெயர்களையும் உயர்வுமிக்க அவனது பண்புகளையும் மாற்றாமல், மறுக்காமல், உருவகப்படுத்தாமல், ஒப்பாக்காமல் நம்பிக்கை கொள்வதோடு இவை அறிவிக்கின்ற மகத்தான அர்த்தங்களையும் நம்புவதும் இறைநம்பிக்கையில் அடங்கும். அந்த அர்த்தங்கள்தான் அல்லாஹ்வின் தன்மைகளாகும். இத்தன்மை களில் எதையும் அவனது படைப்புகளுக்கு ஒப்பாக்காமல் அவனுக்கே உரித்தான விதத்தில் அவற்றைக் அவனுக்குக் கொடுப்பது கடமையாகும்.

﴿ لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ ﴾ ﴿الشورى:١١﴾

அல்லாஹ் கூறுகிறான்: அவனைப் போன்று எதுவும் இல்லை. அவன் (யாவற்றையும்) செவியேற்பவனும் பார்ப்பவனும் ஆவான். (42:11)